**பாசக்கார பருத்திவீரன்கள்**



வில்லிப்புத்தூர் அருகே அச்சன்குளத்தில் சிவக்குமார் (அலைபேசி : 98429 99363) மற்றும் அவரின் அண்ணன் பிச்சை முருகன் (அலைபேசி : 94871 80905) ஆகியோரின் வயல்வெளி இருக்கிறது. இயற்கைக்கு இழுத்த பசுமை இருபது ஏக்கர் தோட்டத்தில், பன்னெண்டு ஏக்கருல பருத்தி, நெல், வாழைன்னு வெள்ளாமை நடக்குது. எனக்கு மூலிகையைப் பத்தி தெரிஞ்சுக்கறதுல ஆர்வம் அதிகம். அதனால புளியங்குடி, கோமதிநாயகம், தஞ்சாவூர்-சித்தர், கொடுமுடி, நடராஜன் மாதிரியான இயற்கை விவசாய ஆர்வலர்கள்கிட்டயும் அடிக்கடி பேசுவேன். அப்படித்தான் இயற்கை விவசாயத்து மேல ஆர்வம். ஆனா, எங்க தோட்டத்துல மாடுக இல்லாததால எனக்கு அது சாத்தியப்படல.

இடையில வேலைக்காக மதுரைக்குப் போக வேண்டியதாயிடுச்சி. தம்பியும், அம்மாவும் தான் விவசாயத்தைப் பாத்துக்கிறாங்க. ரெண்டு மாடுகள் வாங்கி, இயற்கை விவசாயம் செய்ன்னு அடிக்கடி சொல்வேன்என். ஆனா, தம்பி கேக்கவே இல்ல. பசுமை விகடன்ல வர்ற கட்டுரைகளைப் படிக்க படிக்க இயற்கை விவசாயத்துல ஆர்வம் அதிகமாகிக்கிட்டே போச்சி பிச்சை முருகன் என்று கூறினார்.இயற்கை விவசாயத்தால கிடைக்கிற தன்மையை கண் முன்ன நிரூபிச்சிக் காட்டினா நிச்சயம் தம்பி நம்புவான்னு நினைச்சேன். அதுக்குப் பிறகு தான் ஆளுக்கு ரெண்டு ஏக்கருல விவசாயம் செய்வோம்ன்னு பேசிக்கிட்டோம். எங்க தோட்டத்துலயே ரொம்ப வருசமா பெரியவர் ஒருத்தர் வேலை பாக்குறாரு. அவரை வெச்சிக்கிட்டே வேலைகளை ஆரம்பிச்சேன்.

பஸ்ஸில் பயணப்பட்ட சாணம் தம்பியும் நானும் ஒரே நாள்ல ஆளுக்கு ரெண்டு ஏக்கருல பக்கத்து, பக்கத்து வயல்ல பருத்தியை (எஸ்ஆர்விபி2) நட்டோம். மதுரையில நான் வேலை பாக்குற இடத்துக்கு பக்கத்துல ஒரு அம்மா, நாலு மாடுகள் வெச்சிக்கிட்டு பால் வியாபாரம் செய்றாங்க. பத்து லிட்டர் கோமியத்துக்கு ஒரு படி அரிசின்னு கொடுத்து கோமியத்தை வாங்கிக்குவேன். சாணத்துக்கு காசு வாங்க மாட்டாங்க. அப்படி வாங்கின எல்லாத்தையும் பஸ் மூலமா எங்க ஊருக்கு கொண்டு வந்து, தோட்டத்துல வெச்சி பஞ்சகாவ்யா, மூலிகைப் பூச்சிவிரட்டி, அமுதக் கரைசல் எல்லாத்தையும் தயாரிச்சேன். உள்ளூருல யாரும் பிடிச்சித் தர்றதில்லை. அதனால தான் வெளியிலிருந்து வாங்கிட்டு வந்தேன். பருத்தியை நட்டதும் ஒண்ணரை மாசத்துல ஆட்டுச் சாணத்தை வயல் முழுக்க போட்டேன். ரெண்டாவது மாசத்திலிருந்து பதினைஞ்சி

நாளைக்கொரு முறை அமுதக் கரைசலைத் தெளிச்சேன். நானும் தம்பியும் ஒரே நாள்ல தான் நட்டோம். ஆனா, அவனை விட ஒரு மாசத்துக்கு முன்னாடியே என் வயல்ல பருத்தி வெடிச்சிருச்சி.

இதுவரைக்கும் பதினாலு குவிண்டால் பஞ்சகாவ்யா, அமுதக் கரைசல், மீன் அமிலம் இதையெல்லாம் தண்ணியிலக் கலந்து விடுறதுக்காக ஒரு பிளாஸ்டிக் டிரம்ல குழாயை வெச்சி தயார் பண்ணி வெச்சிருக்கேன். வாய் மடை வரப்பு மேல அதை வெச்சி கொஞ்சமா திறந்து விட்டா தண்ணியில கலந்து வயல் முழுக்கப் போயிரும். இந்தப் பகுதியில மாவுப்பூச்சி அதிகம் பாதிச்சிருக்கு. அதனால பருத்தி போட்டவங்க ரொம்ப போறு நட்டமாகிட்டாங்க. ஆனா, என்னோட வயல்ல மாவுப்பூச்சி தாக்குதல் இல்லை. மாசி ஒண்ணாம் தேதி நட்ட செடி இதுவரைக்கும் ரெண்டு ஏக்கருல பதினாலு குவிண்டால் மகசூல் கொடுத்திருக்கு. இன்னும் நாலு குவிண்டாலுக்கு குறையாம கிடைச்சிரும்.

மொத்தம் 18 குவிண்டால் ஆனா, இராசயன உரம், பூச்சி மருந்துன்னு ஏகப்பட்ட செலவு செஞ்சும் ரெண்டு ஏக்கர்ல வெறும் அஞ்சி குவிண்டால் தான் இதுவரைக்கும் தம்பிக்கு கிடைச்சிருக்கு.ஆக, ஒரு ஏக்கர்ல எனக்கு 9 குவிண்டால்.. தம்பிக்கு 3.5 குவிண்டால் வித்தியாசம் 5.5 குவிண்டால் இதையெல்லாம் பாத்தப் பின்னாடி தான் மனசு மாறி இயற்கை விவசாயம் செய்ய அவனும் முடிவு செஞ்சிருக்கான். மடக்கிப்போட்ட மாவுப்பூச்சி யூரியா டிஏபி பொட்டாஷ்ன்னு எல்லாத்தையும் போட்டேன். ஒரு பூச்சியைப் பாத்தாலும் உடனே மருந்தடிச்சிடுவேன். உரம் போட்டதால என் செடிக, உயரமா வளந்துச்சி. ஆனா, அண்ணனோட செடிக சராசரி உயரந்தான் இருந்திச்சு. ஆனா, நான் எவ்வளவோ மருந்தடிச்சும் கேக்காம என்னோட வயல்ல வந்து உக்கார்ந்த மாவூப்பூச்சி, அவரோட வயலை எட்டிப் பார்க்கலை.

அப்பவே எனக்கு ஆச்சர்யம் தாங்கல. அதைவிட ஆச்சர்யம்.. மகசூல் ரெண்டு வயல்லயும் ஒரே ஆளுக தான் பருத்தி எடுக்கிறாங்க. என் வயல்ல அஞ்சி பேரு ஒரு நாளைக்கி நாப்பது கிலோ எடுத்தா, அவரோட வயல்ல எழுபது கிலோ வரைக்கும் எடுத்தாங்க. அதோட பருத்தியை எடுக்க ரொம்பக் கஷ்டப்படவேண்டியிருந்தது. எடையும் கம்மிதான். அதுக்குப் பிறகு தான் இயற்கை விவசாயத்தில் என்னமோ இருக்குன்னு முடிவு பண்ணினேன்.நம்மாழ்வார் அய்யா பயிற்சிக்குப் பிறகு, நாம இருக்கிற இடத்துலேயே இவ்வளவு ஆதாரம் இருந்தும், காசு கொடுத்து எதுக்காக விஷத்தை வாங்கி நிலத்துக்கு போட்டோம்ன்னு நெனைச்சி வேதனையாயிடுச்சி. முதல் வேலை நாட்டுமாடுங்க வாங்குறது தான் முழுமையான இயற்கை விவசாயியா மாறி, நஞ்சில்லா உணவை உற்பத்தி செய்யப்போறேன். அதோட நாங்க எங்க பண்ணையை இயற்கை விவசாயத்துல ஒரு மாதிரி பண்ணையாவும் மாத்தப் போறோம்.

**இப்படித்தான் இயற்கை சாகுபடி**

இந்தப் பகுதியில் மாசிப் பட்டத்தில் தான் அதிகமாக பருத்தி நடவு இருக்கும். நிலத்தைக் கட்டியில்லாமல் புழுதியாக உழவு செய்து, தண்ணீர் வசதி அதிகம் இருந்தால் 20 அடிக்கு 10 அடி என்ற அளவிலும், குறைவாக இருந்தால் 10 அடிக்கு 10 அடி இடைவெளியிலும் பார் அமைக்கலாம். பிறகு கயிறு பிடித்து, இரண்டுக்கு ஒன்றரை அடி இடைவெளியில் விதையை நடவு செய்து (ஏக்கருக்கு நான்கு கிலோ விதைகள்), தண்ணீர் பாய்ச்சவேண்டும். ஆறாவது நாளில் முளை விடத் தொடங்கி, மூன்று மாதங்களில் நன்கு வளர்ந்துவிடும். இதற்கிடையில் இரண்டு தடவை களை எடுக்கவேண்டும். வாரம் ஒரு தண்ணீர் அவசியம். நான்காவது மாதத்தின் முடிவில் பருத்தி வெடிக்கத் தொடங்கும். அதிலிருந்து நான்கு மாதங்கள் வரை பருத்தி

எடுக்கலாம்.முளை விட்டதிலிருந்தே நோய்த் தாக்குதல் தொடங்கிவிடும். வேர்ப்புழு, காய்ப்புழு, மாவுப் பூச்சி, தேன்நோய், இலைச்சுருட்டுப் புழு ஆகியவை தான் அதிகம் தாக்கும். தொடர்ந்து ஒரே நிலத்தில் பருத்தி பயிரிட்டால் மாவுப்பூச்சி அதிகளவு தாக்கும்.

இராசயனம் பயன்படுத்தி விவசாயம் செய்பவர்கள் இதற்கு விதவிதமான பெயர்களில் உரங்களையும், மருந்தையும் வாங்கி வயலில் கொட்டுகிறார்கள். ஆனால். இயற்கை முறைக்கு நடவு செய்த முப்பதாவது நாளில் ஏக்கருக்கு ஒன்பது டேங்க் பஞ்சகாவ்யாவை கைத்தெளிப்பான் மூலமாக தெளித்தால் போதும். 45ம் நாளில் இரண்டாவது சுற்றுக்கு அதே அளவு பஞ்சகாவ்யா 60ம் நாளில் மூலிகைப் பூச்சி விரட்டி ஒன்பது டேங்க் : 75ம் நாள் இஞ்சி, பூண்டு கரைசல், 90ம் நாள் அமுதக் கரைசல்: 100ம் நாள் பதினாறு வகையான மூலிகைகளை கோமியத்தில் ஊறவைத்த கரைசல் என்று முறையாகத் தெளிக்கவேண்டும். (இந்த நேரத்தில் பக்கத்து வயல்களில் அரும்பு கொட்டத் தொடங்கியிருக்கிறது ஆனால், பிச்சைமுருகன் வயலில் அரும்பு கொட்டாமல், எல்லாப் பூவும் காயாகி வெடித்திருக்கிறது). இதையெல்லாம் செய்து வந்தால் காய்ப்புழு தாக்குதல், மாவுப்பூச்சி தாக்குதல் சுத்தமாக இருக்காது.

ஒரு ஏக்கரில் பருத்திச் சாகுபடி செலவு - வரவு கணக்கு

| விவரம் | இயற்கை வழி சாகுபடி | | இராசயன வழி சாகுபடி | |
|---|---|---|---|---|
| | செலவு | வரவு | செலவு | வரவு |
| உழவு | 1,000 | | 1,000 | |
| பார் அமைக்க | 800 | | 800 | |
| விதை | 240 | | 240 | |
| நடவு | 400 | | 400 | |
| களை (2 x 600) | 1,200 | | 1,200 | |
| இடுபொருட்கள் | 1,650 | | 1,650 | |
| அறுவடைக்கூலி | 3,000 | | 3,000 | |
| மொத்த மகசூல் | | | | |
| ரூ. 29 x 900 கிலோ | | 26,100 | | |
| ரூ. 29 x 350 கிலோ | | | | 10,150 |
| மொத்தம் | 8,290 | 26,100 | 10,440 | 10,150 |
| நிகர லாபம் | | 17,810 | | -290 |

பருத்தி ஒரு கிலோ ரூபாய் முதல் 32 ரூபாய் வரை விலை போகிறது. சராசரியாக 29 ரூபாய் வீதம் இங்கே கணக்கிடப்பட்டுள்ளது. இயற்கை வழி விவசாயம் செய்யும் வயலில் ஒரு ஆள், ஒரு நாளில் 15 கிலோ பருத்தி எடுக்கிறார். அந்த வகையில் 900 கிலோவுக்கு 60 ஆட்களுக்கு 50 ரூபாய் வீதம் மொத்தம் 3 ஆயிரம் ரூபாய் சம்பளம் இராசயன விவசாய வயலில் 10 கிலோ பருத்தியே ஒரு ஆள் எடுக்கிறார். அந்த வகையில் 700 கிலோவுக்கு 70 ஆட்களுக்கு 50 ரூபாய் வீதம் 3,500 ரூபாய் சம்பளம். கூலிச்செலவும் கூடுகிறது இரசாயன விவசாயத்தில் இதைப் பார்க்கும் போது, தம்பிக்கு நஷ்ட கணக்கே வருகிறது.

இவருக்கு மட்டுமல்ல.. விருதுநகர் மற்றும் திருநெல்வேலி பகுதிகளில் இந்தத் தடவை பருத்தி விதைத்த பெரும்பாலோருக்கு நஷ்டமே ஏற்பட்டிருக்கிறது.

இயற்கை மற்றும் இராசயன முறைகளில் விளைந்த பருத்தியின் விற்பனை விளைந்த பருத்தியின் விற்பனை விலை ஒரொ மாதிரியாகவே இங்கே கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கே, கிட்டத்தட்ட 150 சதவிகிதம் அளவுக்கும் மேல் கூடுதல் லாபம் கிடைத்துள்ளது. இதுவே இயற்கை பருத்தி என்று தனியாக விற்பனை செய்யப்பட்டால் விலை இன்னும் கூடுதலாகவே இருக்கும்.